தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**03.06.2013 A.M**

---

## உத்தரமேரூரில் 40 மி.மீ. மழை

காஞ்சிபுரம் மாவட்டத்தில் அதிகபட்சமாக உத்தரமேரூரில் 40 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

கோடையின் உச்சமாக அக்னிநட்சத்திரம் கடந்த மே 28-ம் தேதி முடிவடைந்தது.

இந்நிலையில் ஜூன் 1-ஆம் தேதி மாவட்டத்தில் உத்தரமேரூர், காஞ்சிபுரம், ஒரகடம், தாம்பரம் உள்ளிட்ட பகுதிகளில் பரவலாக லேசான மழை பெய்தது.

அதிகபட்சமாக ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி நிலவரப்படி உத்தரமேரூரில் 40 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. ஞாயிற்றுக்கிழமையும் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் லேசான மழை பெய்தது.

சில இடங்களில் பலத்தக் காற்று, மின்னல், இடியுடன் கூடிய மிதமான மழை பெய்தது.

கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக மக்களை வாட்டி வந்த வெயிலின் கொடுமையில் இருந்து இந்த மழை சற்று ஆறுதலைத் தந்தது.

## நேரடி மானியத் திட்டம்: முதல்வருக்கு மத்திய அமைச்சர் விளக்கம்

மத்திய அரசின் நேரடி மானியத் திட்டத்தைப் புரிந்து கொள்ளாமல் புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி பேசியிருக்கிறார் என்று மத்திய இணையமைச்சர் வே.நாராயணசாமி தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களிடம் கூறியது: நேரடி மானியத் திட்டம் மிகச் சிறந்த திட்டம். இதன் மூலம் மானிய மோசடிகள் தடுக்கப்படும். அத்துடன், மத்திய அரசு மாநிலங்களுக்கு மானிய உதவி வழங்குவதும் மக்களுக்கு நேரடியாகத் தெரிய வரும். இதனால் இத்திட்டத்தை மத்திய அரசு நடைமுறைப்படுத்துகிறது.

மத்தியப் பிரதேசத்தில் ஆதார் எண்ணுடன் இணைக்கும் போது 35 ஆயிரம் போலி ரேஷன் கார்டுகள் இருப்பது கண்டறியப்பட்டது. ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசித் திட்டம் நடைமுறையில் இருக்கிறது. இதில் மத்திய அரசின் பங்கு ரூ.16, மாநில அரசின் பங்கு ரூ.3. ஆனால், இத்திட்டத்தை மாநில அரசு மட்டுமே செயல்படுத்துவது போல காட்டப்படுகிறது.

இதுபோல பல திட்டங்களுக்கும், பட்ஜெட் நிதி தவிர்த்து, 60 விழுக்காடு நிதியை மத்திய அரசு வழங்குகிறது. நேரடி மானியத் திட்டத்தைப் பற்றி புரிந்துகொள்ளாமல், முதல்வர் ரங்கசாமி பேசியிருக்கிறார். இது கண்டிக்கத்தக்கது.

மத்திய அரசை அணுகி திட்டங்கள் பெற முடியாத முதல்வர், மாநில அந்தஸ்து கிடைத்தால் சிறப்பாக ஆட்சி நடத்த முடியும் என்கிறார். புதுவைக்கு சிறப்பு மாநில அந்தஸ்து கிடைத்தால்தான் நிதிநிலையைச் சரி செய்ய முடியும். நிர்வாகத்தைச் சிறப்பாக நடத்த முடியும். அதிகப்படியான நிதியை மத்திய அரசிடம் இருந்து பெற முடியும்.

ஆனால், மாநில அந்தஸ்து கிடைத்தால் 30 விழுக்காடு மானியம் மட்டுமே மத்திய அரசிடம் இருந்து கிடைக்கும். சிறப்பு மாநில அந்தஸ்து கிடைத்தால் 90 விழுக்காடு மானியம் கிடைக்கும்.

எனவேதான் காங்கிரஸ் சார்பில் சிறப்பு மாநில அந்தஸ்து வேண்டுமென வலியுறுத்தி வருகிறோம். நேரடி மானியத் திட்டம் தொடர்பான புத்தகத்தை முதல்வருக்கு அனுப்புகிறேன். அதைப் படித்து புரிந்து கொள்ளட்டும்.

இந்த விழாவில் பங்கேற்ற அ.தி.மு.க. எம்எல்ஏ, இத்திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து வெளிநடப்பு செய்துள்ளார். தமிழக முதல்வர் ஜெயலலிதா திட்டத்தை எதிர்க்கும்போது, அக்கட்சி பிரதிநிதி விழாவில் பங்கேற்றது வியப்பளிக்கிறது.

இலங்கைக் கடற்படையினர் எல்லையில் போர்க்கப்பலை நிறுத்தி வைத்து, மீனவர்களை அச்சுறுத்தி வருவதாகக் கூறப்படுகிறது. இது தொடர்பாகத் தமிழகம், புதுவையைச் சேர்ந்த அரசியல் கட்சித் தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கச்சத்தீவை மீட்க வேண்டுமென்ற கோரிக்கையும் எழுந்துள்ளது. இக்கோரிக்கையை மத்திய அரசின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளேன். மேலும், பாதுகாப்புத்துறை அமைச்சர் அந்தோனியைச் சந்தித்து, எல்லையில் இந்தியக் கப்பல்களை நிறுத்தக் கேட்டுள்ளேன் என்றார்.

## உரம் வாங்கும் விவசாயிகளின் முகவரியை பெற வியாபாரிகளுக்கு உத்தரவு

உர விற்பனையில் முறைகேட்டைத் தடுக்கும் வகையில் விவசாயிகளின் முழுமையான முகவரியை உர வியாபாரிகள் வாங்க வேண்டும் என்று அரசு உத்தரவிட்டுள்ளது.

தென்மேற்குப் பருவமழை தொடங்கி விட்டதால் விவசாயப் பணிகள் விரைவில் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் விவசாயத்துக்குத் தேவையான விதைகள், உரம் ஆகியவற்றை விவசாயிகளுக்கு தடையின்றி கிடைப்பதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகிறது.

மாவட்டம்தோறும் உரம் அனுப்பப்பட்டு வருகிறது. கடலூர் மாவட்டத்தில் விவசாயிகளுக்குத் தேவையான உரங்கள் அனைத்தும் கூட்டுறவுச் சங்கம், கடைகளில் இருப்பு வைக்கப்பட்டு இருக்கிறது.

நடவு காலத்தில் அதிக விலைக்கு விற்பனை செய்யும் நோக்கில் உரங்களை கடத்தி செல்வதற்கு வாய்ப்புகள் உள்ளன.

இதனால் உரம் கடத்தலைத் தடுக்கும் வகையில் அரசு புதிய உத்தரவை பிறப்பித்துள்ளது. விவசாயிகளுக்கு உரம் விற்பனை செய்யும்போது வியாபாரிகள் ரசீது வழங்க வேண்டும்.

மேலும் விவசாயிகளின் பெயர், தெரு, கிராமம் உள்ளிட்ட முழுமையான முகவரி மற்றும் செல்போன் அல்லது தொலைபேசி எண்களையும் வியாபாரிகள் வாங்க வேண்டும். விவசாயிகளின் முகவரி, தொடர்பு எண்கள் ஆகியவற்றை வியாபாரிகளின் தங்களின் படிவம் எண்ணில் குறிப்பிட வேண்டும்.

முழுமையான முகவரி இல்லாதபட்சத்தில், அதிகாரிகள் ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டால் வியாபாரியே பொறுப்பு ஏற்க வேண்டும் என்று அரசு உத்தரவிட்டுள்ளது.

## நவீன வசதிகளுடன் நடமாடும் மண் பரிசோதனை மையம்

பல்வேறு நவீன வசதிகளுடன், மதுரை மாவட்டத்துக்கு புதிதாக நடமாடும் மண் பரிசோதனை ஊர்தி வழங்கப்பட்டுள்ளது.

இந்த நடமாடும் மண் பரிசோதனை ஊர்தி, மதுரை மாவட்டத்தில் 13 வட்டாரங்களில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் நேரடியாகச் சென்று, அந்த கிராமங்களின் மண் வளத்தைக் கண்டறியும் பொருட்டு, ஆய்வு மேற்கொள்ள வழங்கப்பட்டுள்ளது. இந்த நடமாடும் பரிசோதனை மையத்தை, மாவட்ட ஆட்சியர் அன்சுல் மிஸ்ரா, வெள்ளிக்கிழமை துவக்கி வைத்தார். செல்லம்பட்டி வட்டாரம் கருமாத்தூர் கிராமத்தில் மண் மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டன.

நடமாடும் மண் பரிசோதனை மையம் குறித்து, வேளாண் இணை இயக்குநர் அ.ஜெ.அ. ஜெய்சிங் ஞானதுரை கூறியது: மண்ணில் உள்ள உவர் மற்றும் களர் பிரச்னைகளைக் கண்டறியவும், தழைச்சத்து, மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்துகளின் அளவினை துல்லியமாகக் கணக்கிட்டு கண்டறியவும், அதற்கான நவீன மின்னணு கருவிகள் இந்தப் பரிசோதனை ஊர்தியில் பொருத்தப்பட்டுள்ளன.

மண்ணில் உள்ள நுண்ணூட்டச் சத்துகளின் நிலையை, மிகத் துல்லியமாகக் கணினி உதவியுடன் டிஜிட்டல் முறையில் இயங்கக் கூடிய மின்னணு கருவி மூலம் கண்டறியும் வசதியும் உள்ளது.

நாளொன்றுக்கு 150 மண் மாதிரிகளைப் பரிசோதனை செய்ய முடியும். பரிசோதனையைத் துல்லியமாகவும், சரியான நேரத்தில் செய்து முடிப்பதற்கான அனைத்து வசதிகளும் இந்த ஊர்தியில் உள்ளது. இதில், மூன்று வேளாண் அலுவலர்கள், ஒரு உதவி வேளாண் அலுவலர், இரு ஆய்வக உதவியாளர்கள் உள்ளனர்.

நவீன கருவிகள் பொருத்தப்பட்டுள்ளதால், உடனடியாக மண் மற்றும் நீரின் கார, அமில, உப்புத் தன்மைகளை அறிந்திடலாம். மைக்ரோ சத்துகளான இரும்பு, துத்தநாகம், மக்னீசியம், மாங்கனீசு ஆகியவைகளின் அளவுகளையும் கண்டறியலாம். மண் பரிசோதனைக்கு ரூ. 20 கட்டணமாக வசூலிக்கப்படும். கிணற்று நீர், ஆழ்குழாய் கிணற்று நீரின் தன்மையையும் இந்தப் பரிசோதனை மையத்தில் ஆய்வு செய்யலாம்.

மேலும், இது சம்பந்தமாக தொழில்நுட்ப ஆலோசனைகளைப் பெற, மூத்த வேளாண் அலுவலரை 94861-40412 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என்றார்.

### வேளாண் பொருள்கள் பதப்படுத்தும் பயிற்சி

வேளாண் பொருள்கள் பதப்படுத்துதல் தொடர்பான பயிற்சி முகாமில் பங்கேற்க விரும்புபவர்கள் விண்ணப்பிக்கலாம்.

சென்னையில் உள்ள உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரியில், ஜூலை 1 ஆம் தேதி முதல் 31 ஆம் தேதி வரையில், வேளாண் பொருள்கள் பதப்படுத்துதல் பற்றிய பயிற்சி வகுப்புகள் நடைபெற உள்ளன.

இப்பயிற்சிக்கான உணவு, தங்குமிடம் இலவசமாக வழங்கப்படுகிறது. ஆர்வமுள்ள அனைவரும் இந்தப் பயிற்சியில் பங்கு பெறலாம். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: உணவு மற்றும்

பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரி, கொடுவள்ளி, அலமாதி அஞ்சல், செங்குன்றம் வழி, சென்னை- 600052. தொலைபேசி எண்கள்: 044-27680214, 94441-55312.

ஜூன் 25 வரை பயிற்சிக்கான விண்ணப்பம் பெறப்படும். தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு, ஜூன் 28 ஆம் தேதி தகவல் தெரிவிக்கப்படும். இத்தகவல், மதுரை வேளாண் கல்லூரி செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருச்சுழியில் விவசாயிகளுக்கு கையேடு

திருச்சுழி அருகே பண்ணை மூன்றடைப்பு, தொட்டியன்குளம், மணவராயனேந்தல், தம்மநாயக்கன்பட்டி, புரசலூர் உட்பட பல கிராமங்களில், எம்.ரெட்டியபட்டி வேளாண்துறை சார்பாக, ஒருங்கிணைந்த கையேடு வழங்கும் விழா நடந்தது.

வேளாண் உதவி இயக்குனர் நாச்சியாரம்மாள் தலைமை வகித்தார். ஊராட்சி தலைவர்கள் உதயகுமார், ராஜேந்திரன், எர்ரம்ம நாயக்கர், தனலட்சுமி, வள்ளி முன்னிலை வகித்தனர். தோட்டக்கலை உதவி இயக்குனர் ஜெயலட்சுமி வரவேற்றார். விற்பனைத் துறை வேளாண் அலுவலர் சந்திரசேகரன், பொறியியல் துறை முருகேஷ், கோபிநாத், மீன்வளத்துறை அலுவலர் கோவிந்தன், ரத்தினகுமார் பேசினர்.

மண் மாதிரி எடுத்தல், மண்புழு உரம் தயாரித்தல், விதை நேர்த்தி செய்தல் பற்றி, விவசாயிகள் செயல் விளக்கம் அளித்தனர். அட்மா தொழில்நுட்ப மேலாளர் பிரேமா விளக்கினார். ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர்கள், தோட்டகலை அலுவலர்கள் செய்திருந்தனர்.

## உள்ளூர் டி.வி. மூலம் பருத்தி சாகுபடி விளக்கம்

முதுகுளத்தூர் விவசாயிகளுக்கு உள்ளூர் தொலைக்காட்சி ஒலிபரப்பு மூலம் பருத்தி சாகுபடி அபிவிருத்திகள் குறித்து விளக்கப்பட்டது.

மாவட்ட ரிலையன்ஸ் அறக்கட்டளை, முதுகுளத்தூர் அவார்டு தொண்டு நிறுவனம் ஆகியவை இணைந்து முதுகுளத்தூர், கடலாடி, கமுதி ஆகிய தாலுகாக்களைச் சேர்ந்த விவசாயிகள் பயன்பெறும் வகையில் இந்நிகழ்ச்சியை சனிக்கிழமை நடத்தின.

முதுகுளத்தூரில் உள்ள உள்ளூர் தொலைக்காட்சி மூலம் பருத்தி சாகுபடிக்குரிய வேளாண் தொழில்நுட்பங்கள், விதை நேர்த்தி, உரமிடும் முறை உள்ளிட்டவை குறித்து விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

மாவட்ட வேளாண் தொழில் நுட்ப வல்லுநர் மகாலிங்கம், செல் போன்கள் மூலம் சந்தேகங்கள் மற்றும் விவரங்கள் கேட்ட விவசாயிகளுக்கு தகுந்த பதில் அளித்தார்.

இதற்கான ஏற்பாடுகளை மாவட்ட ரிலையன்ஸ் அறக்கட்டளை அலுவலர்கள் ஆர். ஸ்ரீகிருபா, ஆன்டனி அருள், அவார்டு தொண்டு நிறுவன நிர்வாக இயக்குனர் சின்ன மருது உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

**வறட்சி நிவாரணம் வழங்கல்**

பல்லடம் ஒன்றியம் செம்மிபாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்க அலுவலகத்தில் செம்மிபாளையம் ஊராட்சி பகுதியைச் சேர்ந்த 278 விவசாயிகளுக்கு ரூ.13 லட்சத்து 72 ஆயிரம் மதிப்பிலான வறட்சி நிவாரணத் தொகையை அரசு கேபிள் டிவி வாரியத் தலைவர் கே.ராதாகிருஷ்ணன் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் பல்லடம் எம்.எல்.ஏ.கே.பி.பரமசிவம், மாவட்ட ஊராட்சி தலைவர் எம்.சண்முகம், ஒன்றிய தலைவர்கள் எம்.கே.ஆறுமுகம் (பல்லடம்), எஸ்.சிவாச்சலம் (பொங்கலூர்), கூட்டுறவு சங்கத் தலைவர்கள் ஏ.சித்துராஜ், எஸ்.எஸ்.மணியன், பல்லடம் நகராட்சி துணைத் தலைவர் பி.கே.பழனிசாமி,மாவட்ட அதிமுக இணைச் செயலாளர் ஆர்.ஜோதிமணி உள்பட பலர் பங்கேற்றனர்.

**இயற்கை வேளாண்மைக்கு விவசாயிகள் மாற வேண்டும்**

இயற்கை விவசாயத்துக்கு விவசாயிகள் மாற வேண்டும் என இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் பேசினார்.

உடுமலை வித்யாசாகர் கலை அறிவியல் கல்லூரி வளாகத்தில் "இயற்கை வேளாண்மை' என்ற தலைப்பில் கருத்தரங்கம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. கல்லூரி செயலர் வி.சத்யநாதன் தலைமை வகித்தார்.

இதில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, நம்மாழ்வார் பேசியது:

பசுமை புரட்சியால், ஏழை விவசாயிகள் ஏழைகளாகவே இருந்து வருகின்றனர். கடந்த 50 ஆண்டுகளில் நிலங்கள் தரிசாக மாறிவிட்டன. பசுமை புரட்சிக்கு பிறகுதான் விஷத்தன்மை கொண்ட விதைகளையும், ரசாயன உரங்களையும் விவசாயிகள் பயன்படுத்தும் நிலை ஏற்பட்டது. இது வேதனைக்குரிய விஷயமாக மாறிவிட்டது. மான்சாண்டோ நிறுவனத்தை இந்தியாவில் அனுமதித்ததன் விளைவாக இங்குள்ள விவசாயிகள் அந்த நிறுவனத்துக்கு அடிமைகளாக

மாறிவிட்டனர். ஆண்டுதோறும் ஒரு லட்சம் டன் பூச்சிக் கொல்லி மருந்துகளை இந்தியா இறக்குமதி செய்கிறது. சில வியாபாரிகள் வெளிநாட்டு நிறுவனத்தின் ஏஜண்டுகளாக மாறிவிட்டனர். இந்த ஏஜண்டுகள் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை குவித்து வருகின்றனர். யாரையும் விலைபேசி தங்களது பொருள்களை சந்தையில் விற்கும் நுட்பங்களை கடைப்பிடித்து ஒட்டு விதைகள், அதிக விளைச்சல் என்று கூறி விவசாயிகளை ஏமாற்றி வருகின்றனர். விவசாய படிப்புகள் என்று கூறி தற்போது கல்வியிலும் தங்களது வியாபாரத்தை துவக்கியுள்ளன வெளிநாட்டு நிறுவனங்கள்.

இந்தியாவில் அனைத்து இயற்கை வளங்களும் உண்டு. காடுகளில் உள்ள மரங்கள், செடிகள் எந்த உரங்களும் போடாமல்தான் ஆரோக்கியமாக வளர்ந்து வருகின்றன. தற்போது ஆங்காங்கே நடைபெறும் உணவுத் திருவிழாக்களில் ஏராளமான உணவு வகைகள் பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்தப்படுகின்றன. அந்த உணவுகள் அனைத்தும் விஷத்தன்மை கொண்டவையாகும். இதனால் தற்போது அன்றாடம் உணவுக்கு செலவாகும் தொகையை விட மருந்துகளுக்கு அதிகம் செலவாகிறது.

எனவே, விவசாயிகள் இயற்கை வேளாண்மைக்கு மாற வேண்டும். அப்போதுதான் அடுத்த தலை முறையாவது ஆரோக்கியமாக வளரும் என்றார். வித்யாசாகர் கலை அறிவியல் கல்லூரி, தமிழ்நாடு விவசாயிகள் விழிப்புணர்வு இயக்கம், தமிழ்நாடு மின் துறை பொறியாளர்கள் அமைப்பு, ஆர்.எஸ்.பவுண்டேசன் ஆகிய அமைப்புகளைச் சேர்ந்தோர் இந்தக் கருத்தரங்கிற்கான ஏற்பாட்டை செய்திருந்தனர். கல்லூரி முதல்வர் ந.ஜெகநாதன், ஆலோசகர் சு.சுப்பிரமணியம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### பவானிசாகர் அணை நீர்மட்டம் 31.29 அடி

பவானிசாகர் அணை நீர்மட்டம் சனிக்கிழமை நிலவரப்படி 31.29 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 1,666 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 158 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 1.29 டி.எம்.சி.

### சோளிங்கரில் அதிக மழை

வேலூர் மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை இரவு அதிக அளவாக சோளிங்கரில் 101 மி.மீட்டர் மழை பெய்துள்ளது.

இம்மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை மாலை பரவலாக நல்ல மழை பெய்யத் தொடங்கியது.

இரவு வரை நீடித்த இம்மழையை அடுத்து மாவட்டத்தில் சனிக்கிழமை காலை 8.30 மணி வரையிலான கடந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை விவரம்:

அரக்கோணம் 61, குடியாத்தம் 17.2, வேலூர் 62.1, மேல் ஆலத்தூர் 10, வாலாஜாபேட்டை 53, ஆற்காடு 59.2, காவேரிப்பாக்கம் 23.8.

வெள்ளிக்கிழமை இரவு பெய்த மழையை அடுத்து சனிக்கிழமை காலை முதல் வேலூர் நகரில் வெப்பநிலை குறைவாக காணப்பட்டது.

மாலையில் மேகமூட்டத்துடன் இதமான காற்று வீசியது. இரவு லேசான மழை பெய்தது.

## விவசாயிகளுக்கான ஆடு வளர்ப்புப் பயிற்சி நிறைவு

வெண்ணந்தூர் வேளாண்மைத் துறை சார்பில், ஆடு வளர்ப்பு தொழில் நுட்பம் குறித்து கால்நடை விவசாயிகளுக்கு  பயிற்சி அளிக்கப்பட்டது. வெண்ணந்தூர் அருகேயுள்ள மூலக்காடு கிராமத்தில் 7 நாள்கள் நடைபெற்ற இதற்கான பயிற்சி முகாம் நிறைவு விழா அண்மையில் நடைபெற்றது.

அட்மா திட்ட நிதியுதவியுடன் வேளாண்மைத் துறை, வேளாண் பொறியியல் துறை, வேளாண் வணிகத் துறை, கால்நடைத் துறை போன்றவற்றின் மூலம் விவசாயிகளுக்கு விவசாயம், கால்நடை வளர்ப்பு போன்றவற்றில் பல்வேறு தொழில்நுட்ப பயிற்சிகள் வழங்கப்பட்டு இடு பொருள்களும் வழங்கப்பட்டு வருகின்றன.  இதனையடுத்து கால்நடை விவசாயிகளுக்கு பரண்மேல் ஆடு வளர்ப்பு குறித்த பண்ணைப் பள்ளி மூலக்காடு கிராமத்தில் வாரம் ஒரு நாள் என்ற அடிப்படையில் ஏழு நாள்கள் நடைபெற்றது.  கால்நடை  மருத்துவர்கள், துறை பேராசிரியர்கள் மூலம் நடைபெற்ற இந்தப் பயிற்சியில்  பரண்மேல் ஆடுகள் வளர்ப்பதால் ஏற்படும் நன்மைகள், சுகாதாரமான முறையில் ஆடுகள் வளர்ப்பு,  அசோலா தீவனங்கள் உற்பத்தி, தீவன புல்கள் உற்பத்தி போன்றவை குறித்தும், இந்தப் பயிர்களை தீவனமாக பயன்படுத்துவதால் ஏற்படும் ஆட்டின் வளர்ச்சி குறித்தும் கால்நடை விவசாயிகளுக்கு பயிற்சியளிக்கப்பட்டது.

பின்னர் நடைபெற்ற இதற்கான பயிற்சி முகாம் நிறைவு நாள் விழாவுக்கு வெண்ணந்தூர் வட்டார வேளாண்மைத் துறை உதவி இயக்குநர் கு.சீனிவாசன் தலைமை வகித்தார். அண்ணா அரசு கலைக் கல்லூரி பேராசிரியர் ராஜசேகரபாண்டியன்,  வட்டார கால்நடை உதவி மருத்துவர் லில்லி அருள்குமாரி, கால்நடை உதவி மருத்துவர் நித்யா, பேராசிரியர் வெஸ்லி ஆகியோர்  சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்று கால்நடை வளர்ப்பில்  புதிய தொழில்நுட்பம் குறித்துப் பேசினர்.

அட்மா திட்ட வட்டார தொழில் நுட்ப மேலாளர் மா.ரமேஷ், தொழில் நுட்ப வல்லுநர் தி.ஜமுனாராணி ஆகியோர் பங்கேற்றனர்.

## கோடை விழாவில் இன்று கால்நடைகள் கண்காட்சி

சேலம் மாவட்டம், ஏற்காட்டில் நடைபெற்று வரும் 38-ஆவது கோடை விழாவில் இறுதி நாளான ஞாயிற்றுக்கிழமை (ஜூன் 2) நாய்கள், கால்நடைகள் கண்காட்சி நடைபெறுகிறது.

கால்நடை பராமரிப்புத் துறை சார்பில், காலை 11 மணிக்கு ஏற்காடு கலையரங்கம் அருகேயுள்ள மைதானத்தில் நாய்கள், கால்நடைகள் கண்காட்சி நடைபெறுகிறது.

இதில், சேலம், ஏற்காடு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து கொண்டு வரப்படும் பல விதமான நாய்கள், கால்நடைகள் பங்கேற்கின்றன.

முன்னதாக ஊட்டச்சத்து துறை சார்பில், கொழு கொழு குழந்தைகள், தவழும் குழந்தைகளுக்கான போட்டி, பெண்களுக்கான சமையல் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

சேர்வராயன் கோயிலில் பகல் 12 மணியளவில் திண்டுக்கல் சக்தி கலைக் குழுவினரின் தப்பாட்டம், கரகாட்டம், ஆதிவாசி நடன நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இதேபோல, திறந்தவெளி அரங்கில் செங்கை நாட்டியாலயா மீனாட்சி குழுவினரின் பரதம், முல்லை நடவரசு குழுவினரின் பாடலுடன் கூடிய பட்டிமன்றம் ஆகியவை நடைபெறுகின்றன.

மாலை 6 மணிக்கு கோடை விழா நிறைவு நிகழ்ச்சி நடைபெறுகிறது.

சேலம் மாவட்ட ஆட்சியர் மகரபூஷணம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில் நெடுஞ்சாலை, சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கிப் பேசுகிறார்.

## களைகட்டும் சிறுதானியம், மூலிகைப் பொருள் விற்பனை

திருச்சி அரசுப் பொருள்காட்சி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள மகளிர் குழுக்களின் தயாரிப்புகளுக்கான அரங்கில் சிறுதானியங்கள், ரசாயன உரமிடப்படாத விவசாய உற்பத்திப் பொருள்கள் மற்றும் மருந்துகளுக்கு பொதுமக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருக்கிறது. இதனால், இந்த அரங்கில் எந்த நேரமும் மக்கள் கூட்டம் அலைமோதுகிறது.

திருச்சி ஜான் வெஸ்ட்ரி பள்ளியின் விளையாட்டுத் திடலில் அரசுப் பொருள்காட்சி நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு அரசுத் துறைகளின் சாதனைகள் குறித்த அரங்குகளுடன், புத்தகக் கண்காட்சியும், பொழுதுபோக்கு அம்சங்களும், வீட்டு உபயோகப் பொருள்களும் இங்கு உள்ளன.

எத்தனை அரங்குகள் இருந்தாலும், சிறுதானியங்கள் மற்றும் மூலிகைப் பொருள்களைக் கொண்ட மகளிர் திட்ட அரங்கு மட்டும் எப்போதும் கூட்டத்துடன் காணப்படுகிறது. இங்கு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வரவழைக்கப்பட்டுள்ள மகளிர் குழுவினர் தங்களின் பல்வேறு தயாரிப்புகளை காட்சிப்படுத்தி விற்பனை செய்து வருகின்றனர்.

காந்திகிராமம் லட்சுமி சேவா சங்கத்தின் அஸ்வகந்தாதி லேகியம், கருணை லேகியம், சதாவரி லேகியம், ரோஜா மொக்கு லேகியம், மருதாணி தைலம், நீலிபிருங்காதி தைலம், தாளிசாதி வடகம், திரிபலாதி மாத்திரை, வல்லாரை மாத்திரை ஓம தீநீர் போன்றவை விற்பனை செய்யப்படுகின்றன.

கைக்குத்தல் அரிசி, அக்மார்க் தேன், பாசிப்பயறு லட்டு, சத்துமாவு, மூலிகைப் பொடி வகைகள், மூலிகை குளியல் சோப்புகள், ஷாம்புகள், பாத்திரம் துலக்கும் பவுடர் வகைகளும் வைக்கப்பட்டுள்ளன.

தீரன் மாநகரைச் சேர்ந்த சாய்பாபா மகளிர் சுய உதவிக்குழுவினர், வேப்பம்பூ தேன், துளசித் தேன் உள்ளிட்ட வகைவகையான தேன் வகைகளையும் வைத்துள்ளனர். வேப்பம்பூவை 45 நாள்களும், துளசியை 90 நாள்களும் பதப்படுத்துவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். மேலும், பருப்பு வகைகளையும், அத்திப்பழத்தையும் தேனில் ஊற வைத்து விற்பனைக்கு வைத்துள்ளனர்.

இங்கு கிடைக்கும் உளுந்து உருண்டை நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. கருப்பு உளுந்தை உடைத்து, அமுக்கிரா கிழங்கு, பூனா காலி விதை, சுக்கு, நெய், ஏலக்காய், முந்திரி ஆகியவற்றையும் சேர்த்து தயாரிக்கப்படும் இந்த உருண்டை கால்சியம் சத்து நிறைந்தது. மூட்டுவலியைக் குறைக்கவும், எலும்புகள் வலுப்படவும், குறிப்பாக பெண்களுக்கு இந்த உருண்டை நல்லது என்றும் கூறுகிறார் இக்குழுவின் ஊக்குநர் வி. மாதவி.

கிராமாலயா சார்பு குழுக்கள் தயாரிக்கும் அடைமாவு, சத்துமாவு, சிறுதானிய புட்டு மிக்ஸ், வாழைப்பூ தொக்கு, வாழைத் தண்டு தொக்கு, இலந்தை வடை, மோர்க்குழம்பு மிக்ஸ், சில்லி மசாலா மற்றும் பல்வேறு வகையான வத்தல்கள் வைக்கப்பட்டுள்ளன. முதலில் மக்கள் விலகிப் போனாலும், இவற்றிலுள்ள சத்துகள் குறித்து விளக்கிய பிறகு நிறைய வாங்கிச் செல்வதாகக் கூறுகிறார் இங்குள்ள விற்பனையாளர்.

சமயபுரத்தைச் சேர்ந்த அகஸ்தியர் மகளிர் குழுவின் தயாரிப்புகளான கற்றாலை சோப்புகள், சாம்பு வகைகள், ஜெல்லிகளும் உள்ளன. அனைத்து வகையான வலிகளையும் நீக்கும் வலி கொல்லி மற்றும் கால் ஆணி,. பித்த வெடிப்புகளை நீக்கும் தைலம் மிகச்சிறிய புட்டிகளில் விற்பனை செய்யப்படுகின்றன. இந்த சிறிய புட்டிகளுக்கு மக்களிடம் நல்ல வரவேற்பு இருப்பதாகக் கூறுகிறார் இக்குழுவின் தலைவி என். கோமதி.

கல்லுக்குழியைச் சேர்ந்த தாய் மகளிர் குழுவின் சார்பில், அரிதாகிப் போன சிறுதானியங்களான திணை, குதிரை வாலி, வரகு போன்றவற்றின் அரிசிகளும், அவல்களும் வைக்கப்பட்டுள்ளன. மேலும், ராகி மாவில் தயாரிக்கப்பட்ட முருக்குகள், ரசாயன உரமிடப்படாத அரிசி, பருப்பு போன்றவற்றால் தயாரிக்கப்பட்ட நொறுக்குத் தீனிகள் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன.

## முந்திரி விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வலியுறுத்தல்

அரியலூர் மாவட்டத்தில் முந்திரி சாகுபடி செய்து, விளைச்சல் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றார் அரியலூர் மாவட்ட காங்கிரஸ் கட்சியின் துணைத்தலைவர் எஸ்.எஸ்.கணேசன்.

இதுகுறித்து அவர், மாவட்ட ஆட்சியர் எம்.ரவிக்குமாரிடம் அண்மையில் அளித்த மனுவில் தெரிவித்திருப்பதாவது:

அரியலூர் மாவட்டம், உடையார்பாளயைம் மற்றும் செந்துறை வட்டத்தில் முந்திரி விவசாயம் அதிகம் சாகுபடி செய்யப்பட்டு உள்ளது. இந்நிலையில், கடந்தாண்டு போதிய மழை இல்லாததால் முந்திரி விளைச்சல் முற்றிலும் பாதிக்கப்பட்டது. மேலும், முந்திரி மரங்களும் அனைத்தும் காய்ந்து வருவதால், விவசாயிகளின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகி உள்ளது. இதனால், விவசாயிகள் பெற்ற கடனை திரும்ப செலுத்த முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே, தமிழக அரசு நஞ்சை மற்றும் புஞ்சை நிலங்களுக்கு வறட்சி நிவாரணம் வழங்குவது போல, வறட்சியால் பாதிக்கப்பட்ட முந்திரி விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 15 ஆயிரம் நிவாரணம் வழங்க மாவட்ட நிர்வாகம் பரிந்துரை செய்ய வேண்டுமென அதில் தெரிவித்துள்ளார்.

## தமிழகத்தில் வரும் 24 மணி நேரத்தில் மழை பெய்ய வாய்ப்பு: சென்னை வானிலை மையம் தகவல்

தமிழகத்தில் வரும் 24 மணி நேரத்தில் மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது.

கேரளாவில் தென்மேற்குப் பருவமழை தொடங்கியதை அடுத்து அந்த மாநிலத்தை ஒட்டி உள்ள கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் கடந்த 2 நாள்களாக மழை பெய்து வருகிறது. பலத்த மழை காரணமாக குற்றாலம் அருவிகளில் ஞாயிற்றுக்கிழமை அதிகளவில் தண்ணீர் கொட்டியது. இதனால் சுற்றுலாப் பயணிகள் உற்சாகமாகக் குளித்து மகிழ்ந்தனர்.

வெப்பச் சலனம் காரணமாக தலைநகர் சென்னையில் பல இடங்களில் ஞாயிற்றுக்கிழமை பிற்பகலில் பலத்த மழை பெய்தது. கடந்த 24 மணி நேரத்தில் திருச்சி, தஞ்சாவூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, விழுப்புரம், நாகை உள்ளிட்ட இடங்களில் மழை பெய்துள்ளது. இதனிடையே தமிழகம் மற்றும் புதுச்சேரியில் வரும் 24 மணி நேரத்தில் ஒரு சில இடங்களில் மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது.

### தமிழகத்தில் பரவலாக மழை

தென்மேற்குப் பருவமழை தொடங்கியதை அடுத்து தமிழகத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. மேற்கு மலைத் தொடரை ஒட்டியுள்ள மாவட்டங்களில் கன மழை பெய்து வருகிறது.

காவிரி நீர்பிடிப்புப் பகுதிகளில் பலத்த மழை பெய்ததால் மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு மூன்று மடங்காக அதிகரித்துள்ளது.

கேரளத்தில் பருவமழை தீவிரமடைந்துள்ளதால் அந்த மாநிலத்தை ஒட்டி உள்ள கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் கடந்த 2 நாள்களாக மழை பெய்து வருகிறது.

பலத்த மழை காரணமாக குற்றாலம் அருவிகளில் ஞாயிற்றுக்கிழமை அதிகளவில் தண்ணீர் கொட்டியது. சுற்றுலாப் பயணிகளின் வருகையும் அதிகளவில் இருந்தது.

குற்றாலம் பேரருவி மற்றும் ஐந்தருவியில் சனிக்கிழமைமுதல் தண்ணீர் விழத் தொடங்கியது. ஞாயிற்றுக்கிழமை அதிகாலைமுதல் தொடர்ந்து சாரல் மழை பெய்த வண்ணம் இருந்தது. பிற்பகலில் குற்றாலம் பேரருவியில் தண்ணீர்வரத்து அதிகரித்து பாதுகாப்பு வளைவின் மீது கொட்டியது. சிறிய அளவிலான கற்களுடன், செம்மண் நிறத்துடன் தண்ணீர் கொட்டியது. சுற்றுலாப் பயணிகள் உற்சாகமாகக் குளித்து மகிழ்ந்தனர்.

கன்னியாகுமரியில் கடல் சீற்றம்: கன்னியாகுமரி மாவட்டத்தில் பலத்த காற்றுடன் மழை தொடர்ந்து நீடித்து வருகிறது. அத்துடன் கடல் பகுதியில் அலையின் சீற்றம் காணப்படுகிறது.

இந்த மாவட்டத்தில் கடந்த இரு நாள்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. ஞாயிற்றுக்கிழமை காலை நிலவரப்படி, பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் 14.65 அடியாக உள்ளது. விநாடிக்கு 143 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது.

பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் 16.95. இந்த அணைக்கு விநாடிக்கு 125 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது.

காவிரியில் நீர் வரத்து அதிகரிப்பு: காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழையால் ஞாயிற்றுக்கிழமை ஒகேனக்கல்லில் நீர்வரத்து விநாடிக்கு 300 கன அடியாக அதிகரித்தது. கர்நாடகம் மற்றும் கேரளத்தில் பருவமழை பெய்து வருவதால் காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. வறண்டு பாறைகளாகக் காட்சி அளித்த நீர்வீழ்ச்சி பகுதிகளில் செந்நிறத்தில் மழைநீர் கொட்டுகிறது. இதை சுற்றுலாப் பயணிகள் கண்டு ரசித்தனர்.

சென்னையில் கனமழை: வெப்பச் சலனம் காரணமாக தலைநகர் சென்னையில் பல இடங்களில் ஞாயிற்றுக்கிழமை (ஜூன் 2) பிற்பகலில் பலத்த மழை பெய்தது.

கோடம்பாக்கம், அடையாறு, குரோம்பேட்டை, பூந்தமல்லி, ராயப்பேட்டை, நுங்கம்பாக்கம், திருவான்மியூர் உள்ளிட்ட இடங்களில் ஞாயிற்றுக்கிழமை மாலையில் ஆரம்பித்த மழை பல மணி நேரம் நீடித்தது. இதன் காரணமாக சாலைகளில் மழை நீர் தேங்கி குளம் போல் காட்சியளித்தது. இதனால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

கடந்த 3 மாதங்களாக கடும் வெயில் வாட்டி வதைத்த சென்னையில், இரு நாள்களாக வெப்பம் குறைந்து மேக மூட்டமாக உள்ளது. காற்று மேலடுக்கில் ஏற்பட்ட சுழற்சி காரணமாக வானம் மேக மூட்டமாக இருப்பதாக வானிலை ஆய்வு மையத் தகவல்கள் தெரிவித்தன.

இந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை பிற்பகலில் திடீரென மழை பெய்யத் தொடங்கியது. சிறிய தூறலாக ஆரம்பித்த மழை சிறிது நேரத்திலேயே வலுவடைந்தது. சுமார் ஒன்றரை மணிநேரம் விடாமல் பெய்த மழை காரணமாக நகரில் உள்ள சுரங்கப்பாதைகளில் குளம் போல் மழை நீர் தேங்கி நின்றது.

சாலைகளிலும் வெள்ளம் வடியாமல் தேங்கியிருந்ததால் பெரும்பாலான இடங்களில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. சென்னையில், 90 மில்லி மீட்டர் மழை பதிவானதாக வானிலை மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இன்றும் மழை பெய்ய வாய்ப்பு: வெப்பச் சலனம் காரணமாக சென்னையில் திங்கள்கிழமை (ஜூன் 3) வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## சுதாரித்துக் கொள்வோம்!

குறுவைச் சாகுபடிக்காக மேட்டூர் அணை ஜூன் 12-இல் திறக்கப்பட வேண்டும். ஆனால், வழக்கம்போல இந்த ஆண்டும் அதற்கு வாய்ப்புகள் இல்லை என்பது தெளிவாகிவிட்டது.

நீர்மேலாண்மை வல்லுநர்களை உறுப்பினர்களாகக் கொண்டு காவிரி மேலாண்மைக் குழுவை அமைக்க வேண்டிய மத்திய அரசு, அதில் ஆர்வம் காட்டாமல், வெறுமனே நீதிமன்றத்தைத் திருப்திப்படுத்துவதற்காக மாநிலங்களின் தலைமைச் செயலர்களைக் கொண்ட காவிரி மேற்பார்வைக் குழுவை அமைத்தது. ஆனால், இதனால் பயன் கிடைக்கும் என்பது வெறும் கனவுதான்.

புதுதில்லியில் ஜூன் 1-ஆம் தேதி நடைபெற்ற காவிரி மேற்பார்வைக் குழுக் கூட்டத்தில் பங்கேற்ற கர்நாடக அரசின் தலைமைச் செயலர் எஸ்.வி. ரங்கநாத்தின் பேச்சு இதை உறுதிப்படுத்துகிறது. அவர் முதல்வர் சித்தராமையாவின் கருத்தை முன்வைப்பவராகத்தான் இருக்கிறார். "கர்நாடக மாநிலத்தில் புதிய அரசு இப்போதுதான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளது. அதனால் நதிநீர்ப் பங்கீடு குறித்து முடிவு எடுக்க நான்கு வார கால அவகாசம் தேவைப்படுகிறது' என்று அவர் பேசியுள்ளார். அதாவது ஜூலை முதல் வாரத்தில்தான் காவிரி நீரைத் தமிழகத்துக்கு வழங்குவது குறித்து யோசிக்கவே செய்வார்கள்.

காவிரி நீர்ப் பங்கீட்டை, எந்த மாநில அதிகாரிகள், அரசியல்வாதிகள் தலையீடும் இல்லாமல், நிலைமையைப் பரிசீலித்து அதற்கேற்ப நீர்மேலாண்மை செய்யும் அமைப்பு இருந்தால் மட்டுமே, தமிழ்நாட்டுக்கு தண்ணீர் கிடைக்கும். இதுபோன்ற மேற்பார்வைக் குழுவால் எதுவும் நடக்கப்போவதில்லை. ஜூன் 12-ஆம் தேதி இவர்கள் மீண்டும் கூடினாலும்கூட, கர்நாடக தலைமைச் செயலர் இதே நான்கு வார காலஅவகாசத்தைத்தான் மீண்டும் கிளிப்பிள்ளைபோல கேட்கப்போகிறார்.

அணையைத் தன் பொறுப்பில் எடுத்துக்கொண்டு தண்ணீர் திறந்துவிடும் அதிகார பலம் இந்தக் குழுவுக்குக் கிடையாது. அதனால், இந்தக் குழுவால் எந்த முடிவையும் காண முடியாது. ஆகவே தமிழ்நாட்டுக்கு நிகழாண்டில் குறுவைச் சாகுபடிக்கு தண்ணீர் கிடைக்க வாய்ப்பே இல்லை.

சென்ற ஆண்டு தென்மேற்குப் பருவமழை 63 மில்லிமீட்டர் மட்டுமே பொழிந்தது. (சராசரி அளவு 280 மில்லிமீட்டர்). மிகக் குறைந்த அளவு பெய்த பருவமழையும் கர்நாடகத்தின் (நீர்)விடாப்பிடியும் நிகழாண்டு சென்ற குறுவையில் பெரும் இழப்பை ஏற்படுத்தின. அந்த நிலைமை இந்த ஆண்டும் ஏற்படுதல் கூடாது. சென்ற ஆண்டு, நிலத்தடி நீர் மட்டுமே விவசாயிகள் பலருக்கு ஆதரவாக இருந்தது. அதுவும்கூட, மின்பற்றாக் குறையால் மிகவும் சிரமமான ஒன்றாக மாறியபோது, அரசு தலையிட்டு டெல்டா மாவட்டங்களில் மட்டும் 12 மணிநேர விவசாய மின்சாரம் வழங்கியதால் குறுவை பல இடங்களில் பிழைத்து நின்றது.

நேற்றைய தினம் கேரளத்தில் தொடங்கியுள்ள தென்மேற்குப் பருவமழை தமிழ்நாட்டிலும் பரவலாக மழையைக் கொண்டு வந்துள்ளது. இந்த ஆண்டு பருவமழை வழக்கத்தைவிட அதிகமாக இருக்கும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது. தமிழக விவசாயிகளுக்கு நம்பிக்கையூட்டுவதாகப் பருவமழையின் வருகை அமைந்துள்ளது.

ஜூன் 12-ஆம் தேதி மேட்டூர் அணை திறக்க முடியாமல் போனாலும், பருவமழை பரவலாகப் பெய்து, அதே நேரத்தில் மேட்டூர் அணையிலும் போதுமான நீர்வரத்து அதிகரித்து, ஜூன் 25 தேதிக்குள்ளாக அணைநீர் திறக்கப்பட்டால், குறுவைச் சாகுபடியைத் தொடங்க வாய்ப்புள்ளது. ஆனால் அந்த அளவுக்கு தண்ணீர் கிடைக்குமா என்பதே சந்தேகம். "மன-காவிரி'-யின் மிகைநீர் ஓடும் வாய்க்காலாகத்தான் தமிழகக் காவிரியை கர்நாடகம் கருதுகிறது.

2012 ஜூன் மாதம் மேட்டூர் அணையில் 41 டிஎம்சி தண்ணீர் இருப்பு இருந்தது. ஆனால் இந்த ஆண்டு அணையில் நீர் இருப்பு வெறும் 4 டிஎம்சி மட்டுமே. பருவமழை பெய்தாலும் அணைக்கு எந்த அளவுக்குத் தண்ணீர் கிடைக்கும் என்பதும், கிருஷ்ணராஜ சாகர் முழுதும் நிரம்பாமல், அதிகளவு தண்ணீர் வெளியேற்றுவதைக் கர்நாடகம் மேற்கொள்ளாது என்பதும் தெள்ளத் தெளிவு. ஆகவே, பருவமழையை நம்பி, சிறுதானியப் பயிர்களை சாகுபடி செய்யலாம். கர்நாடகத்தை நம்பிக் குறுவைச் சாகுபடி செய்வது தற்கொலைக்கு ஒப்பானது.

தற்போது தமிழக அரசு, தனது வேளாண்மைத் துறையை முடுக்கிவிட்டு, எங்கெல்லாம் குறுவைச் சாகுபடி செய்ய இயலும் என்பதைத் தெளிவாக அடையாளப்படுத்த வேண்டியது மிகமிக அவசியம்.

மேட்டூர் அணை ஜூன் மாத இறுதியில் திறக்கப்படும்போது, எவ்வளவு தண்ணீர் அணையில் இருக்கும், எத்தனை ஆயிரம் ஏக்கர் பயிருக்குப் போதுமானது என்பதைத் தெளிவாகக் கணித்து, எந்தெந்த மாவட்டங்களில், எந்தெந்த பகுதி விவசாயிகள் மட்டுமே குறுவையைச் சாகுபடி செய்யலாம் என்பதை மிகத் தெளிவாக அறிவித்தால், தங்களுக்குத் தண்ணீர் கிடைக்கும் வாய்ப்பு குறைவு என்பதை அறியவரும் விவசாயிகள் சம்பா பயிரை மட்டுமே பயிரிடத் தீர்மானிப்பார்கள்.

இடைப்பட்ட இரண்டு மாதங்களில் சிறுதானியப் பயறு வகைகளை சாகுபடி செய்து, குறுவையால் கிடைக்கக்கூடிய ஆதாயத்தைக் காண்பார்கள்.

இதைச் செய்ய தமிழக அரசும் வேளாண்மை அதிகாரிகளும் தயக்கம் காட்டக்கூடும். காரணம், இப்போது குறுவையைத் தியாகம் செய்துவிட்டு, சிறுதானியப் பயிருக்கு மாறினால், கர்நாடகம் இதையே முன்னுதாரணமாகச் சொல்லி, ஒவ்வொரு ஆண்டும் தண்ணீர் திறந்துவிட மறுக்குமே என்ற எண்ணத்தால்தான், இது உண்மையும்கூட.

கர்நாடகத்தின் குறுக்குப் புத்திக்காக, விவசாயிகள் வாழ்க்கையில் குறுக்குச்சால் ஓட்டலாமா? எந்தெந்த பகுதிக்கு குறுவை சாத்தியம் என்பதை இப்போதே அறிவுறுத்துவதும், சிறுதானியத்துக்கு ஊக்கப்படுத்துவதும் விவசாயிகள் வாழ்வைக் காப்பாற்றும், தற்கொலைகள் நிகழாது. அரசு இதில் தயக்கம் காட்டக்கூடாது!

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**03.06.2013 A.M**

---

**தேங்காய் மகசூல் பாதிப்பு**

நத்தம்:நத்தம் தொகுதியில் மழையின்றி தேங்காய் மகசூல் பாதிக்கப்பட்டுள் ளது. நத்தம் மற்றும் சாணார்பட்டி ஒன்றியங்களில் கடந்தாண்டில் பருவமழை முற்றிலும் ஏமாற்றியது. இப்பகுதி ஆறுகள், கண்மாய் குளங் களில் தண்ணீர் இன்றி வறண்டு காணப்படுகின்றன. நெல், நிலக்கடலை, பருத்தி, வாழை, தக்காளி, சோளம் இப்பகுதியில் விளைகின்றன. இது தவிர, அதிகளவு தென் னை, மா, புளி, சப்போட்டா, கொய்யா ஆகிய பழவகை மரங்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. மழையின்றி, தென்னை விவசாயம் பாதித்துள்ளது. ந.கோவில்பட்டி, ஏரம்மநாயக்கன்பட்டி, ஒத்தக்கடை, முளையூர், ரெட் டியபட்டி, வத்திப்பட்டி, மூங்கில்பட்டி, காசம்பட்டி, லிங்கவாடி உட்பட சுற்றுவட்டார பகுதியில் விவசாயம் அதிகமாக பாதித்துள்ளது. இதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கும் விழா**

திருவேங்கடம்:செண்பகாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்கும் விழா நடந்தது.கரிவலம்வந்தநல்லூரில் செயல்பட்டுவரும் செண்பகாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் நடந்த விழாவிற்கு சங்க தலைவர் முருகன் தலைமை வகித்தார். நெல்லை புறநகர் மாவட்ட செயலாளர் குமார்பாண்டியன் தமிழக அரசால் வழங்கப்பட்ட வறட்சி நிவாரண தொகையை விவசாயிகளுக்கு வழங்கினார். சங்க செயலாளர் நடராஜன் நன்றி கூறினார்.சங்கரன்கோவில் கூட்டுறவு பண்டகசாலை தலைவர் சங்கரகுமார், ஒன்றிய ஜெ., பேரவை செயலாளர் சண்முகையா, துணைசேர்மன் நயினார், பெரும்பத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க தலைவர் காளியப்பன், நகர செயலாளர் ஆறுமுகம், மாநில கழகபேச்சாளர் லட்சுமணன், சங்க இயக்குனர்கள் கந்தசாமி, முத்துமாரி, கனகராஜ், தெய்வானை, பணியாளர்கள் தர்மராஜ், முருகன், கஸ்தூரி, பஞ்., உறுப்பினர் ஆறுமுகம் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**கடும் வறட்சி எதிரொலிசோளப்பயிருக்கு மாறிய விவசாயி**

லாலாப்பேட்டை: காவிரியாற்றில் தண்ணீர் இல்லாத நிலை மற்றும் போதிய மழை இல்லாததால், கிருஷ்ணராயபுரம் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள், கால்நடைக்காக சோளப்பயிர் சாகுபடிக்கு மாறியுள்ளனர்.கர்நாடகாவில் இருந்து மேட்டூர் அணைக்கு எதிர்பார்த்த தண்ணீர் திறக்கப்படாததால், காவிரி ஆறு வறண்டுள்ளது. மேலும், கரூர் மாவட்டத்தில் கடந்தாண்டு தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை எதிர்பார்த்த அளவில் பெய்யவில்லை. இதனால், நிலத்தடி நீரும் அதலபாதாளத்துக்கு சென்று விட்டது. பெரும்பாலான கிணற்று நீரும் வற்றி விட்டது.குறிப்பாக காவிரியாற்று பாசன பகுதிகளான கிருஷ்ணராயபுரம், கட்டளை, வீரராக்கியம், மாயனூர், திருக்காம்புலியூர், பஞ்சப்பட்டி, லட்சுமார்ப்பட்டி, சிவாயம், வயலூர் ஆகிய பகுதிகளில் உள்ள கிணறுகளில் கூட போதிய தண்ணீர் இல்லை. இதனால் பணப் பயிர்களான நெல், வாழை, கரும்பு மற்றும் மஞ்சள் ஆகியவற்றை சாகுபடி செய்ய முடியாமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர்.இந்நிலையில் கால்நடைகளின் தீவனத்துக்காக சோளப்பயிரை சாகுபடி செய்யும் பணியில், விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது:போதிய தண்ணீர் இல்லாததால், நெல் உள்ளிட்ட பணப்பயிர்களின் சாகுபடி கேள்விகுறியாக உள்ளது. கால்நடைகளுக்கு தீவனம் தேவையாக உள்ளதால், சோளத்தை பயிரிட்டு வருகிறோம். ஒரு சோளக்கட்டு, 100 ரூபாய் முதல், 150 ரூபாய் வரை, விலை போகிறது. தற்போது தென்மேற்கு பருவமழை எதிர்பார்த்த அளவில் பெய்து, காவிரியாற்றில் தண்ணீர் வந்தால் மட்டுமே, நெல், வாழை, கரும்பு, மஞ்சள் உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்ய முடியும்.இவ்வாறு அவர்கள் கூறினர்

**மானிய விலை வைக்கோல் கிலோ... 2 ரூபாய் வைக்கோல் வங்கிகள் துவங்க அரசு முடிவு**

காஞ்சிபுரம்::ஊராட்சி ஒன்றியங்கள் தோறும், வைக்கோல் வங்கி களை துவக்க, கால்நடைத் துறை முடிவு செய்துள்ளது. இவற்றில், மானிய விலையில் கால்நடை வளர்ப்போர் வைக்கோல் பெறலாம்.மாவட்டத்தில், மொத்தம், 19 ஆயிரம் ஹெக்டேரில், நெல் பயிரிடப்படுகிறது. இதன் மூலம், ஆண்டுக்கு, 1.14 லட்சம் டன் வைக்கோல் கிடைக்கிறது.இருப்பினும், கால்நடைகளுக்குத் தேவையான தீவனங்களை பெறுவதில், கால்நடை வளர்ப்போர் சிக்கலை சந்தித்து வருகின்றனர்.நிபந்தனைதற்போது, கால்நடைத் துறை சார்பில், கால்நடை வளர்ப்போருக்கு, தீவனப் புற்கள் வளர்க்க, அரச மானியம் வழங்குகிறது. இதைப் பெற விரும்பும் பயனாளிக்கு, தேவையான பாசன வசதியோடு, குறைந்தபட்சம், 1 ஏக்கர் சொந்த நிலம் இருக்க வேண்டும்.இந்த

நிபந்தனைகளால், குறைவான நிலம் வைத்திருக்கும் கால்நடை வளர்ப்போர், மானியத்தை பெற முடியாத நிலை ஏற்பட்டது.தளர்வு கடந்த, 2010-11ம் ஆண்டில், இலவச கால்நடைகள் வழங்கும் திட்டத்தை, அரச அறிமுகப்படுத்திய போது, தீவன புல் உற்பத்திக்கான மானியம் பெற, 25 சென்ட் நிலம் இருந்தால் போதும் என, விதி தளர்வு செய்யப்பட்டது.இதனால், பெரும்பாலான கால்நடை வளர்ப்போர் பயன்பெற வாய்ப்பு ஏற்படும் என, எதிர்பார்க்கப் பட்டது. ஆனால், மாவட்டம் முழுவதற்கும், 50 ஏக்கர் பரப்பளவிற்கு மட்டுமே, மானியம் வழங்கும் வகையில் நிதி ஒதுக்கப்பட்டது.இதனால், மாவட்டத்தில் உள்ள, 6.21 லட்சம் பச மாடுகளையும், 1.54 லட்சம் எருமை மாடுகளையும் வளர்ப்போர், கட்டுபடி ஆகாத விலையில், சந்தையில் தீவன புல் வாங்கும் நிலை நீடிக்கிறது.கிலோ 2 ரூபாய்இந்த பிரச்னைக்குத் தீர்வாக, மாவட்டத்தில் உள்ள, 13 ஒன்றியங்களிலும், வைக்கோல் வங்கிகளை துவக்க, கால்நடை பராமரிப்புத் துறை முடிவு செய்து உள்ளது.இதுகுறித்து, கால்நடைத் துறை இணை இயக்குனர் ஒருவர் கூறியதாவது:இந்த வங்கிகள், ஒன்றியங்கள் தோறும் உள்ள, கால்நடை மருத்துவமனைகளில் செயல்படும். மேலும், வைக்கோலை கொள்முதல் செய்ய, ஒரு கால்நடை மருத்துவர் அடங்கிய குழு அமைக்கப்படும்.சந்தையில், 1 கிலோ வைக்கோல், 10 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இங்கு, மானிய விலையில், 1கிலோ, 2 ரூபாய்க்கு பெறலாம். இந்தத் திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் பயனாளிக்கு, அடையாள அட்டை வழங்கப்படும்.திட்டத்திற்கான பூர்வாங்கப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. கூடுதலாக கால்நடை உதவியாளர்களை நியமிக்க, அரசிற்குப் பரிந்துரை செய்யப்படும். அரச ஒப்புதல் கிடைத்தவுடன், வைக்கோல் வங்கிகள் செயல்பட துவங்கும். அப்போது, தேவையான தகவல்கள் விவசாயிகளுக்கு அறிவிக்கப்படும்.இவ்வாறு, அவர் கூறினார்."சாகுபடி குறைந்து வருகிறதே!'வைக்கோல் வங்கி திட்டம் குறித்து, சாமந்திபுரத்தில் கால்நடை வளர்ப்பவர், ஆறுமுகம் கூறியதாவது:இது மிகவும் வரவேற்கக் கூடிய திட்டம். ஆனால், கடந்த சில ஆண்டுகளாக மாவட்டத்தில் சாகுபடி பரப்பு குறைந்து வருகிறது. எனவே, இந்தத் திட்டம் எந்த அளவிற்குச் செயல்படுத்தப்படும் என்பது கேள்விக்குறியாக உள்ளது. சாகுபடி பரப்பை அதிகப்படுத்தினால் மட்டுமே, இந்தத் திட்டத்தை சிறப்பாக, ஆண்டு முழுவதும் செயல்படுத்த முடியும். அதற்கான நடவடிக்கையை அரச எடுக்க வேண்டும்.இவ்வாறு, ஆறுமுகம் கூறினார்.

## வங்கி கடனுக்கு ஆறு ஆண்டாக தவம் கிடக்கும் மாற்றுத்திறனாளி விவசாயி வங்கிகள் புறக்கணிப்பு

சிவகங்கை:தேவகோட்டையில், கிணறு தோண்ட வங்கியில் கடன் கேட்டு 6 ஆண்டுகளாக மாற்றுத்திறனாளி விவசாயி தவித்து வருகிறார். சிவகங்கை, தேவகோட்டை அருகே திராணி கிராமத்தை சேர்ந்த மாற்றுத்திறனாளி விவசாயி உடையப்பன், 59. இவருக்கு, ஒரு ஏக்கர் நன்செய், 5.75 ஏக்கர் புன்செய் நிலங்கள் உள்ளன. இவரது தோட்டத்து கிணற்றில், தண்ணீரின் வற்றி போனதால், விவசாயம் செய்ய முடியவில்லை. வறட்சியால் நடவு செய்த பயிர்களை காப்பாற்ற முடியாமல் தவித்தார்.தேவகோட்டை வங்கியில், கிணறு தோண்ட கடனுதவி கேட்டு, 2007ல் விண்ணப்பித்தார். 2 கால்களும் பாதிக்கப்பட்டுள்ள, அவர், தொடர்ந்து முயற்சித்தும், வங்கிகள் கடன் வழங்க முன் வரவில்லை. அதிருப்தி அடைந்த அவர், கலெக்டர் குறைதீர் கூட்டத்தில், 2012 ஜூலை 2 ல் புகார் மனு அளித்தார். அதற்கு பின்பும், கிணறு வெட்ட வங்கிகள் கடன் தரவில்லை. அரசு, பசுமை புரட்சி செய்வதாக கூறி,விவசாயத்துறைக்கு பட்ஜெட்டில் அதிக நிதி ஒதுக்கியது. மானிய விலையில், விதை முதல் பயிர்கடன்கள் வழங்கப்படும் என, அறிவித்தது. இந்த உத்தரவை, மீறும் வகையில், வங்கி மேலாளர்கள் செயல்படுவதால், மாற்றுத்திறனாளி விவசாயி உடையப்பன், கிணறு தோண்ட கடன் கிடைக்காமல் விரக்தியில் உள்ளார். உடையப்பன் கூறுகையில்,""எனது நிலங்களில் நெல், பயிரை நடவு செய்து லாபம் பெற்றேன். வறண்ட கிணறை ஆழப்படுத்த வங்கிகள் கடன் வழங்க கோரிக்கை வைத்தேன். ஸ்டேட் வங்கி, கூட்டுறவு வங்கி, ஐ.ஓ.பி.,என பல வங்கிகளுக்கு தவழுந்து சென்று, கடன் கேட்டும், மேலாளர்கள், மாற்றுத்திறனாளியான எனது கோரிக்கைக்கு செவி சாய்க்கவில்லை. விவசாயத்தை நம்பி வாழும் நான், வாழ வழியின்றி தவிக்கிறேன்," என்றார். வங்கி அதிகாரி ஒருவர் கூறுகையில்,"" வங்கிகள் விவசாயிகளுக்கு கடன் வழங்குவதில்,"சர்வீஸ் ஏரியா' பிரித்துள்ளது. அந்தந்த ஏரியா விவசாயிகள் அவர்களுக்குரிய வங்கியில் கடன் பெற்றால் மட்டுமே, அரசின் மானியம் கிடைக்கும். உடையப்பன் ஏரியா வங்கியில் கடன் பெற முயற்சிக்காததால், இந்த நிலை," என்றார்.

### வறட்சி நிவாரண நிதி ஒதுக்கீடு "ரியல்எஸ்டேட்'காரர்களுக்கும் பலன்

ரெட்டியார்சத்திரம்:குட்டத்துப்பட்டி, சில்வார்பட்டி ஊராட்சிகளுக்கு உட்பட்ட பகுதிகளில், ரியல் எஸ்டேட் துறைக்காக முதலீடு செய்த புள்ளிகளுக்கு, வறட்சி நிவாரண நிதி "ஜாக்பாட்'டாக கிடைத்துள்ளது.வறட்சி மாவட்டமாக அறிவிக்கப்பட்ட நிலையில், வருவாய், வேளாண்துறை சார்பில் அளிக்கப்பட்ட புள்ளிவிபரங்களின்படி, இதற்கான நிவாரணத்தை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தில், பரவலாக நெல், மக்காச்சோளம், பருத்தி போன்றவை சாகுபடி செய்த ஏராளமான விவசாயிகள், லட்சக்கணக்கில் நஷ்டத்தை சந்தித்துள்ளனர். இதற்கான நிவாரணம் கிடைக்கும் என எதிர்பார்த்திருந்த சூழலில்,

பெரும்பாலான விவசாயிகளுக்கு ஏமாற்றமே மிஞ்சியுள்ளது.இந்நிலையில், குட்டத்துப்பட்டி, சில்வார்பட்டி ஊராட்சி பகுதிகளுக்கு உட்பட்ட பல ஏக்கர் பரப்பிலான நிலம், தற்போது ரியல் எஸ்டேட் புள்ளிகளின் கைவசம் உள்ளது. தற்போதைய வறட்சி நிவாரண ஒதுக்கீட்டில், இப்பிரமுகர்களுக்கு பல லட்சம் ரூபாய் கூட்டுறவு சங்கங்கள் மூலம் "ஜாக்பாட்'டாக கிடைத்துள்ளது. ரியல் எஸ்டேட் துறை "டல்'லடிக்கும் நிலையில், இந்த வருவாய் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. உண்மையான வறட்சி பாதிப்புக்குள்ளான விவசாயிகள் பலருக்கு பலன் கிடைக்காமல், ரியல் எஸ்டேட் பிரமுகர்கள் வறட்சி நிவாரணம் பெறுவது மாவட்டத்தில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**03.06.2013 A.M**

---

தொடர்ந்து 5வது ஆண்டாக ஏமாற்றம் கார் சாகுபடி நடக்குமா?



நெல்லை : கடந்த சில ஆண்டுகளாக நெல்லை மாவட்டத்தில் பருவ மழை சீராக பெய்யவில்லை. இதனால் பிசானம், முன் கார், கார் என வருடத்திற்கு 3 முறை நடைபெற்று வந்த நெல் சாகுபடி ஒரு பருவமாக சுருங்கியது. அதுவும் முழுமையாக நடைபெறாத நிலை தொடர்கிறது. குறிப்பாக கார் பருவ சாகுபடிக்காக வழக்கமாக ஜூன் 1ம் தேதி பாபநாசம் அணையில் இருந்து தண்ணீர் திறப்பது வழக்கம். ஆனால், கடந்த 2009ம் ஆண்டு முதல் நீர் இருப்பு குறைந்து தண்ணீர் திறக்க முடியாமல் தள்ளிப் போகிறது.

வடக்கு கோடைமேலழகியான், தெற்கு கோடைமேலழகியான், நதியுண்ணி, கன்னடியன், கோடகன், நெல்லை, பாளை ஆகிய 7 கால்வாய்களின் மூலம் சுமார் 40,500 ஏக்கர் நிலங்கள் நெல் பாசனம் பெற்று பயன் அடைந்து வந்தது. ஜூன் 1ம் தேதி திறக்கப்படும் தண்ணீர் தொடர்ந்து 120 தினங்களுக்கு தடையின்றி வழங்கப்படும்.

ஆனால் மழை குறைந்து வறட்சி தலை தூக்கி உள்ளதால் ஒவ்வொரு ஆண்டும் தண்ணீர் திறப்பு தள்ளிபோகிறது. மிக தாமதமாக தண்ணீர் திறக்கப்படும் போது அடுத்த மழை சீசனுக்கு பயந்து பல விவவாயிகள் தரிசாகவே நிலத்தை போட்டு வைக்கும் நிலையும் அதிகரித்துள்ளது.

கடந்த ஜூன் கடைசியில் தண்ணீர் திறந்ததால் நெல்லை, பாளையங்கால்வாய் பாசன நிலங்களில் கார்சாகுபடி முழுமையாக நடைபெறவில்லை. பிற கால்வாய் பாசன நிலங்களில் ஒரு சில விவசாயிகள் பயிரிட்ட போது கடைசி வரை தண்ணீர் கிடைக்காமல் பல சோதனைகளை சந்தித்தனர்.

இதேபோல் இந்த ஆண்டும் சோகம் தொடர்கிறது. தற்போது பாபநாசம் அணையில் 48.15 கன அடி நீர் மட்டுமே உள்ளது. இது குடிநீர் மற்றும் தொழிற்சாலை உபயோகத்திற்கு தேவைப்படுவதால் கால்வாய்களில் பாசனத்திற்காக உடனடியாக தண்ணீர் திறப்பது சாத்தியம் இல்லை என கருதப்படுகிறது.

தற்போது வெயில் குறைந்து மாவட்டத்தில் பரவலாக சாரல் மழை பெய்யத் தொடங்கி உள்ளது. தொடர்ந்து நீர்பிடிப்பு பகுதிகளில் கன மழை பெய்து பாபாநாசம் அணை நீர்மட்டம் 80 அடியை கடந்தால் அடுத்த 2 வாரங்களில் தண்ணீர் திறக்கப்படலாம். இந்த ஆண்டும் கார் சாகுபடி முழுமையாக நடப்பது அடுத்த இரு வாரங்கள் இயற்கை தரும் வரத்தை பொறுத்தே இருக்கிறது என விவசாயிகள் தெரிவித்தனர்.

**தமிழகம் முழுவதும் பரவலாக மழை கோடை வெப்பம் தணிந்து குளிர்ச்சி**



நெல்லை : நெல்லை, குமரி உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் பெய்து வரும் கனமழையால் கோடை வெப்பம் தணிந்தது. அணைகளுக்கும் தண்ணீர் வரத்து அதிகரிக்க தொடங்கி உள்ளது.நெல்லை மாவட்டத்தில் தட்பவெப்ப நிலை மாறி உள்ளது. நேற்று முன்தினம் குற்றாலம், தென்காசி, பாபநாசம் உள்ளிட்ட மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் மழை பெய்யத் தொடங்கியது. நேற்று இரண்டாவது நாளாக மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்தது.

பாபநாசம், தென்காசி உட்பட மாவட்டம் முழுவதும் விட்டு விட்டு சாரல் மழை பெய்தது. இதனால், சேர்வலாறு மற்றும் பாபநாசம் அணைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. பாபநாசம் அணையில் நேற்று முன்தினம் 48.95 அடியாக இருந்த நீர் மட்டம் நேற்று 49.40 அடியானது. சேர்வலாறில் 62.83 அடியும், மணிமுத்தாறு அணையில் 74.21 அடியாகவும் நீர்மட்டம் இருந்தது.

குமரி: குமரி மாவட்டத்திலும் மழை நீடிக்கிறது. திற்பரப்பு அருவில் அதிக அளவில் தண்ணீர் கொட்டுகிறது. விவசாய பணிகள் சூடுபிடித்துள்ளன. பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் 14.65 அடியாகவும் பெருஞ்சாணியில் ஒரேநாளில் 2 அடி உயர்ந்து 16.95 அடியானது.

நாகர்கோவிலில் நேற்று மதியம் பலத்த சூறைக்காற்றுடன் பெய்த மழையில் அடுக்குமாடி வீட்டின் மேல் அமைக்கப்பட்டிருந்த மேற்கூரை, தூண் பெயர்ந்து விழுந்தது. இதில் 2 வீடுகள் சேதமடைந்தன. வீடுகளில் இருந்த 6 பேர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர். பூதப்பாண்டி

பகுதியில் 2500 வாழைகள் சேதமடைந்தன.

குற்றாலம்: குற்றாலத்தில் நேற்று முன்தினம் சீசன் துவங்கியது முதல் தினமும் விட்டு விட்டு சாரல் மழை பெய்து வருகிறது. நேற்று அதிகாலை முதல் மேற்கு தொடர்ச்சி மலையே தெரியாத அளவிற்கு மேக மூட்டத்துடன் சாரல் பெய்து கொண்டே இருந்தது. இதனால், மெயினருவி, ஐந்தருவி ஆகியவற்றில் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. புலியருவி, செண்பகாதேவி அருவிலும் தண்ணீர் நன்றாக விழுகிறது.

மேட்டூர் அணைக்கும்...

தென்மேற்கு பருவ மழை துவங்கியுள்ளதாலும், காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதாலும், மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு அதிகரித்துள்ளது. நேற்று முன்தினம் காலை விநாடிக்கு 72 கன அடியாக இருந்த நிலையில், நேற்று காலை விநாடிக்கு 222 கன அடியாக அதிகரித்தது. குடிநீருக்காக, அணையில் இருந்து விநாடிக்கு 600 கனஅடி நீர் திறந்து விடப்படுகிறது. வரத்தைவிட திறப்பு அதிகமாக இருப்பதால், நீர்மட்டம் தொடர்ந்து சரிந்து வருகிறது. நேற்று காலை நிலவரப்படி 18.43 அடியாக குறைந்தது.

**வாட்டி வதைத்த கோடைக்கு விடை சென்னையில் மழை கொட்டியது**



சென்னை : சென்னையில் நேற்று திடீரென மழை பெய்தது. பல இடங்களில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. வெயில் கொடுமையில் அவதிப்பட்டு வந்த மக்கள், மழையால் மகிழ்ச்சி அடைந்தனர். தமிழகத்தில் மே 4ம் தேதி தொடங்கிய கத்திரி வெயில் 28ம் தேதி வரை நீடித்தது. இந்நிலையில், கேரளாவில் தென்மேற்கு பருவ மழை தொடங்கியுள்ளது. இதையடுத்து தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் பரவலாக மழை பெய்து வருகிறது.

சென்னையில் நேற்று மாலை திடீரென்று பலத்த காற்றுடன் மழை பெய்தது. மயிலாப்பூர், தேனாம்பேட்டை, பூந்தமல்லி, தாம்பரம் உட்பட பல்வேறு பகுதியில் மழை கொட்டி தீர்த்தது. ஆலந்தூர், பழவந்தாங்கல், நங்கநல்லூர், மீனம்பாக்கம், மடிப்பாக்கம் உள்பட பல பகுதிகளில் நேற்று மாலை சுமார் 2 மணி நேரம் தொடர்ந்து மழை பெய்தது. இதனால் பழவந்தாங்கல், தில்லை கங்காநகர், மீனம்பாக்கம் ஆகிய இடங்களில் உள்ள சுரங்க பாதைகளில் மழைநீர் தேங்கின. 3 பஸ்கள், 2 கார்கள் சுரங்கப்பாதையில் சிக்கியதால், அந்த வழியாக போக்குவரத்து தடைசெய்யப்பட்டது. பின்னர் அங்கு தேங்கியிருந்த மழைநீரை மாநகராட்சி ஊழியர்கள் மோட்டார் மூலம் வெளியேற்றும் பணியில் இரவு வரை ஈடுபட்டனர்.

இதுபோல், குண்டும் குழியுமான மேடவாக்கம் பிரதான சாலையில் மழைநீர் தேங்கி போக்குவரத்து பாதிக்கப்பட்டது. மீனம்பாக்கம் பாரதியார் தெருவில் பல ஆண்டுகளாக இருந்த மரம், மின்கம்பம் மீது சாய்ந்தது. இதனால் மரமும், மின்கம்பமும் அங்குள்ள வீட்டின் மீது விழுந்தது. உடனே அப்பகுதியில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. அந்த தெருவில் பாதாள சாக்கடைக்காக பள்ளம் தோண்டப்பட்டிருந்ததால், மரத்தை அகற்ற வந்த தீயணைப்பு வீரர்கள் திரும்பி சென்றனர். இதுபோல் புறநகர் பகுதியிலும் தாழ்வான பகுதிகள், சுரங்கப்பாதைகளில் தண்ணீர் தேங்கியது. பல இடங்களில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. 2 மாதமாக வெயிலின் பிடியில் சிக்கி தவித்த சென்னை மக்களுக்கு, இந்த மழை மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

## 2013,14ம் நிதியாண்டில் பருத்தி நூல் ஏற்றுமதி 7.7% உயரும்



புதுடெல்லி : நடப்பு நிதியாண்டில் பருத்தி நூல் ஏற்றுமதி 7.7 சதவீதம் அதிகரித்து 115 கோடி கிலோவாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2013,14ம் நிதியாண்டில் பருத்தி நூல் உற்பத்தி 14.2 சதவீதம் உயர்ந்து 400 கோடி கிலோவாக இருக்கும் என்று பருத்தி ஆலோசனை வாரியம் கணித்துள்ளது. 2012,13ம் ஆண்டில் அக்டோபர் முதல் செப்டம்பர் வரையிலான பருத்தி சீசனில் பருத்தி உற்பத்தி 340 லட்சம் பேல்களாக இருக்கும் என்று பருத்தி ஆலோசனை வாரியம் மதிப்பிட்டுள்ளது.

மொத்த தேவை 44 சதவீதம் உயர்ந்து 390 கோடி கிலோவாக இருக்கும் என்று தெரியவந்துள்ளது.